# வழிபாட்டு மஞ்சரி



அமரர் வே. பாலசுப்பிரமணியம் அவர்களின்
நினைவாக வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# வழிபாட்டு மஞ்சரி



கரவெட்டி, நெல்லியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்

கொழும்பு 7, 24 கிறகறி வீதியில் வசித்தவருமான

அமரர் வே. பாலசுப்பிரமணியம் அவர்களின்

நினைவாக வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## *திதி வெண்பா*

*ஓங்குபுக ழாங்கீ ரசவாண்டி லானிமாதம்*
*வீங்குபுகழ் புதனன் றபரபக்கப் பிரதமையே - தேங்குபுகழ்*
*வேலுப்பிள் ளைபால சுப்பிரம ணியச்செம்மல்*
*சீலஞ்சார் சிவன்தாள்சேர் திதி.*

*தொழிலதிபர் (கோபா மில்ஸ்)*

# வே. பாலசுப்பிரமணியம் அவர்கள்

*தோற்றம்* ***03.09.1931*** *மறைவு* ***15.07.1992***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ශ්‍රී ලංකා අග්‍රාමාත්‍ය

இலங்கையின் பிரதம மந்திரி

*Prime Minister of Sri Lanka*

# LATE MR. V. BALASUBRAMANIAM

*Late Mr. Velupillai Balasubramanian was born in Karaveddy, Jaffna. He worked in the private sector for some time, and later gave up same in order to set up his own business, where he could be his own master.*

*He was engaged in the field of imports and exports. He had set up a number of firms involved in the Hotel Industry, Import of Medicinal Drugs and Export of Plants and Foliage. He had been a successful businessman with a large heart to help the poor. He was kind to his friends and associates.*

*He had engaged himself in a lot of philanthropical and benevolent activities ranging from religious, educational and sports. He led an exemplary life.*

*It is a pity that God had taken him away at the age of sixty. May his philanthropical and benevolent activities be continued by his wife and children in the future.*

(D.B. Wijetunga)

Prime Minister

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S. Thondaman, M.P.

## Minister of Tourism & Rural Industrial Development

### அஞ்சலியுரை

இந்நாட்டில் வாழ்கின்ற இந்துமக்கள் இன்று பல கஷ்டங்களின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காகவும், பெற்ற உரிமைகளைக் காப்பாற்றுவதற்காகவும், நாம் போராடிக்கொண்டிருக்கின்ற கால கட்டமிது.

இத்தருணத்தில் எமது மக்களின் துயரைத் துடைக்க-அவர்களின் வேதனைகளைக் குறைக்க பொதுத் தொண்டு புரிகின்ற நிறுவனங்கள்-குறிப்பாக மத தாபனங்கள் முன்வர வேண்டும். அத்தகைய தாபனங்கள் பலம் மிக்கவையாக இயங்க நாம் வழி வகுக்க வேண்டும். இந்த வழியில், சமீப காலத்தில், இந் நாட்டின் இந்து மன்றங்களின் கூட்டமைப்பான அகில இலங்கை இந்து மாமன்றம் பணியாற்றி வந்திருக்கின்றது. மாமன்றத்திற்கு அரசாங்கம் 20 ஆண்டுகளுக்கு முன் தலை நகரில் கொடுத்த காணியில் ஓர் இந்து கலாசாரப்பணிக்கான தலைமையகக் கட்டிடத்தை அமைப்பதில் காலதாமதம் இருந்ததையிட்டு நாம் எல்லோரும் கவலைப் பட்டுக் கொண்டிருந்தோம். அந்தத் தம்பித நிலையை மாற்றி, கடந்த சில மாதங்களாக இந்து மாமன்றத் தலைமையகக் கட்டிடம் துரிதமாக எழும்பிக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு இந்து மாமன்றப் பணிகளில் புதிய திருப்பத்தினைத் தந்து எமக்கெல்லாம் மன நிறைவு அளித்த அன்பர் திரு. வே. பாலசுப்பிரமணியம் கடந்த யூலை மாதம் பதினைந்தாம் திகதி மாலை இறைவனடி சேர்ந்தமை எமது மக்களுக்கு, குறிப்பாக இந்நாடின் இந்து மக்களுக்குப் பேரிழப்பாகும்.

அன்னார் கடந்த இரு ஆண்டுகளில் என்னை நேரிற் சந்தித்து இந்து மாமன்றப் பணிகள் பற்றிக் கலந்துரையாடியிருக்கின்றார். அக்கலந்துரையாடல்களில் மாமன்றத் தலைவர் திரு. பாலசுப்பிரமணியம் இந்து மாமன்றத் தலைமையகத்தைக் கட்டி முடிப்பதில் காட்டிய அக்கறையையும், இந் நாட்டு இந்து மக்களின் நலத்தில் அவர் கொண்டிருந்த ஆர்வத்தையும் நான் அறிய முடிந்தது.

தேங்கிக் கிடந்த மாமன்றக் கட்டிடப் பணிக்குத் தன் சொந்தப் பணத்தை நன்கொடையாகத் தந்து கட்டிட வேலைகளை முடுக்கி விட்டார். இன்று அக்கட்டிடம் நாலாம் மாடி நிலைக்கு உயர்ந்து நிற்கின்றது.

திரு. பாலசுப்பிரமணியம் காட்டிய பாதையில் இந் நாட்டு இந்து மக்களின் நலத்திற்கும் அகில இலங்கை இந்து மாமன்ற வளர்ச்சிக்கும் உழைப்பதே நாம் அவருக்குச் செலுத்தக் கூடிய பெரும் அஞ்சலி.

அன்னாரின் மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் குடும்பத்தினருக்கும் எனது அனுதாபங்களை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சௌமியமூர்த்தி தொண்டமான்**

*சுற்றுலா. கிராமிய தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LATE MR. VELUPILLAI BALASUBRAMAIAM

*I have known Late Mr.Velupillai Balasubramaniam for the last fifteen years. He hails from Karaveddy in Jaffna District where I worked as District Minister for several years.*

*He was a successful businessman in Colombo and a good Philanthropist. All the people who have wealth are not good Philanthropist but late Balasubramaniam was an exception. He was large hearted and generous in his contributions. His sudden demise is an irrepavable loss to the country and to his family members. I wish that his family members will countinue his benevolent activities for which late Bala dedicated his life.*

**U.B. Wijeykoon**
*Minister of Handlooms & Textile Industry.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரங்கற் செய்தி

"தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இலக்கணமாகப் புகழுடன் தோன்றி, புகழுடன் வாழ்ந்து புகழுடனேயே புத்தேளிர் வாழும் உலகம் எய்திய, உத்தமன், அமரர், திரு. வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம். அவர்களைச் சிறுபராயந் தொட்டே யான் அறிவேன். அமரர் அவர்கள் எனது நெருங்கிய உறவினர் என்பதையும் பெருமையுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அமரர் அவர்கள், சுய முயற்சியால் வளர்ச்சியடைந்த (Self made Man) ஒரு சிறந்த உதாரண புருஷன். 'முயற்சி மெய் வருந்தக் கூலி தரும்' என்ற வாக்கிற்கு இலக்கணமாகத் திகழ்த்து, பாடுபட்டுத் தேடிய செல்வத்தில் ஒரு பகுதியை, சமயத் தொண்டு, சமூகத் தொண்டு, கல்வித்தொண்டு ஆகியவற்றுக்கு அளித்துப் பெருமை பெற்று விளங்கினார். இந்து சமய மக்களின் புனித ஸ்தலங்களான திருக்கேதீச்சரத்துக்கு உபயமாகவளித்த உயர்ந்த தேரும், திருக்கோணேஸ்வர ஆலயத்துக்கு மாமல்லபுரத்திலிருந்து தருவித்தளித்த நவக்கிரகச் சிலைகளைக் கொண்டு அமைக்கப்பட்ட நவக்கிரகக் கோவிலும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை. கல்வி நிறுவனங்களுக்கும் கருந்தனம் வழங்கிக் கௌரவித்தார். விளம்பரத்தை விரும்பாத வகையில் எத்தனையோ ஏழைகளுக்கும் உதவிகள் செய்த பரோபகாரி பாலா. அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவராகப் பதவியேற்ற பின் மன்றத்துக்கெனத் தனியான கட்டிடம் ஒன்றினை அமைப்பதில் தீவிர கவனம் செலுத்தி, தானே நிதியும் இட்டுக் கட்டிட வேலைகளையும் ஆரம்பித்து வைத்தார். மேற்படி கட்டிடத்துக்கு அடிக்கல்நாட்டு விழாவில் யானும் கலந்து கொள்ளக் கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். மேலும், சைவமும் தமிழும் தழைக்கப்பாடுபட்ட முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் சிரார்த்த தினத்திலே, அகில இலங்கைத் தமிழ் மொழித்தின விழா ஆண்டு தோறும் கொண்டாடப்படுவதற்கு ஆவன செய்யவேண்டுமென, அமரர் வே. பாலசுப்பிரமனியம் அவர்களைத் தலைவராகக்கொண்டிருந்த அகில இலங்கை இந்து மாமன்றம் விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே, மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் அதற்கான பணிப்புரையினை எமக்கு வழங்கியிருந்தார்கள், என்பதையும் கல்வி இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் ஈண்டு குறிப்பிட விரும்புகின்றேன். "பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை, அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை" என்ற உண்மையினை உணர்ந்து, இவ்வுலக நல்வாழ்வுக்குரிய பொருளையுந் தேடி, அதனைக் கொண்டு அறஞ்செய்து, மறுவாழ்வுக்குரிய அருளையும் தேடி, வானுறையும் தெய்வத்துட் சேர்ந்த அமரர் பாலாவின் ஆன்மா சாந்தி பெறுவதாக, பொன்றுங்கால் பொன்றாத்துணையாகிய அறம், அன்னாரை என்றுங்காப்பதாக.

திருமதி. இராஜமனோகரி புலந்திரன்
கல்வி இராஜாங்க அமைச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் வே. பாலசுப்பிரமணியம்

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு. பாலசுப்பிரமணியத்தின் மறைவு தமிழ் சமூகத்துக்கு ஏற்பட்ட ஈடுசெய்யமுடியாத இடைவெளியாகும். அன்னார் எல்லா இன மக்களினதும் நன்மதிப்பைப் பெற்றவர். எல்லோராலும் நேசிக்கப்பட்டார். கல்விக்காகவும், சமயத்துக்காகவும் அரும் தொண்டாற்றியவர். நல்ல பண்பாளர். சமூக சேவையாளர்.

பிரபல தொழில் அதிபரான அமரர் பாலசுப்பிரமணியம் இந்நாட்டின் கைத்தொழில் வளர்ச்சிக்கும், ஹோட்டல் தொழிற்றுறையின் அபிவிருத்திக்கும் பெரும் பங்களிப்புச் செய்தவர். சைவ உணவு உண்பவர்களுக்கு ஒரு தரமான உணவகம் அமைய வேண்டும் என்ற நன்நோக்குடன் "சாந்தி விகார்" என்ற உணவு விடுதியை ஸ்தாபித்தவர். இன்னும் சில உணவகங்களையும் நிறுவியவர்.

பல பாடசாலைகளின் அபிவிருத்திக்கும், சமயம் சம்பந்தப்பட்ட அமைப்புகளுக்கும் தனது செல்வத்தையும், உழைப்பையும் வாரி வழங்கியவர். அன்னாரின் மறைவு அனைத்துச் சமூக மக்களுக்கும் பேரிழப்பு என்பதில் சந்தேகமில்லை. அவரது நினைவாக வெளியிடப்படும் மலருக்கு எனது உளம் நிறைந்த நினைவஞ்சலியைச் செலுத்துகிறேன்.

நன்றி

எம். எஸ். செல்லச்சாமி
கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுதாபச் செய்தி

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவராகத் திகழ்ந்த அமரர் வே. பாலசுப்பிரமணியம் அவர்கள், தமத கடுமையான உழைப்பின் பயனாக வாழ்வில் உயர்ந்தவர். இனிய சுபாவம் நிறைந்தவர். யாருடனும் எளிமையாகப் பழகுபவர். தமிழ் வளர்ச்சியிலும், இந்து சமய வளர்ச்சியிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவர். சமய வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் உதவி செய்துள்ளார். அவர் ஒரு கொடை வள்ளலாகத் திகழ்ந்த பெருமகனாவார்.

இந்துசமய மக்களுக்குத் தலைநகரில் ஒரு தலைமை நிலையமும் மண்டபமும் இல்லாதிருந்தது ஒரு பெருங்குறையாகும். இத்தகைய ஒரு மண்டபத்தைக் கட்டி எழுப்புவதற்கு அமரர் பாலசுப்பிரமணியம் அவர்கள் ஆற்றிய பங்கு மிகவும் முக்கியமானதாகும். இவரின் முயற்சியினால் கொழும்பின் மத்திய பிரதேசமொன்றில் கால்ஏக்கர் நிலம் கிடைத்தது. இக் கட்டிடத்தை எழுப்புவதற்காகப் பத்துலட்சம் ரூபா நன்கொடையை அவர் அளித்துள்ளார்.

அமரர் பாலசுப்பிரமணியம் அவர்கள் சமயத்தின்பால் கொண்டிருந்த அளப்பற்ற ஈடுபாடு காரணமாக மக்களின் ஆன்மீக வளர்ச்சியிலும், ஆலயங்களின் வளர்ச்சியிலும் தாமும் பங்குகொண்டு உழைத்தார். இந்துசமய நிறுவனங்கள் பலவற்றிற்கு நிதியுதவி அளித்து அவற்றின் வளர்ச்சிக்கு உதவியிள்ளார்.

அப்பெரியாரின் இழப்பு இலங்கை வாழ் இந்துசமய மக்களுக்குப் பேரிழப்பும் ஈடுசெய்ய முடியாததும் ஆகும். அன்னார் இறைநிழலில் ஆத்மா சாந்திபெறவேண்டுமென இறைஞ்சிப் பிரார்த்திக்கின்றேன்.

**பி. பி. தேவராஜ்,**
*இந்துசமய, கலாசார இராஜாங்க அமைச்சர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவாஞ்சலி

திருவாளர் வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் அவர்களின் திடீர் மறைவு தமிழ் பேசும் மக்கள் அனைவருக்குமானவொரு மாபெரும் இழப்பாகும். நீண்ட காலமாகத் தலைநகரில் வதிந்து நாட்டின் அனைத்து மக்களுக்குமாகச் சேவை செய்த ஒரு பரோபகாரியை நாம் இழந்து விட்டோம்.

அன்னாரை நான் சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நன்கறிவேன். மத, இன,மொழி, சாதி வேறுபாடுகளை மறந்து எல்லோரும் இலங்கையர் என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் இந்நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் தத்துவத்தில் நம்பிக்கை கொண்ட அனைவருடனும் சேர்ந்து, பாலசுப்பிரமணியம் அவர்களும் அயராது உழைத்தார். அதன் பலனாக அவரோடு தொடர்புகொண்ட, அவரை அறிந்த அனைத்து மக்களாலும் நண்பனாக, சகோதரனாக நினைத்துப் போற்றப்பட்டார்.

பன்முகப்பட்ட தொழிற்றுறைகளில் ஈடுபட்டு "தொட்டதெல்லாம் பொன்னாகும்" என்பதற்கொப்ப எல்லாத் தொழிற்றுறைகளிலும் சிறந்து விளங்கிய பாலசுப்பிரமனியம், தனது வருமானத்தைப் பல பரோபகார நடவடிக்கைகளுக்கு மனமுவந்து செலவிட்டார். பல சமூக சேவைத் தாபனங்கள் அவரது நன்கொடைகள் மூலம் தலை நிமிர்ந்தன. பல விளையாட்டுக் கழகங்கள் அவரது கொடையின் மூலம் சிறப்புற்று விளங்கின. அத்தகைய ஒரு கொடைவள்ளலை இந்நாடு இழந்தது மிக மனவருத்தத்துக்குரியதே.

இலங்கை இன்று வேண்டுவது அமைதி, சமாதானம், சுபீட்சமாகும். இவற்றைப் பெறுவதற்குத் தலைவர்களுடைய வழிகாட்டல்களும், மக்களுடைய ஒத்துழைப்பும் மிக இன்றியமையாதனவாகும். எல்லோரது பங்களிப்பும் மிக அத்தியாவசியமாகும். அவ்வகையில் பாலசுப்பிரமணியம் தனது பங்களிப்பினை வாழ்நாள் முழுவதும் நிரம்பவே அளித்துள்ளார்.

எனவே, அவர் மறைந்தாலும் அவர் நினைவும், அவரது சேவையும் என்றும் எமது நினைவில் நிற்கும்.

**அல்ஹாஜ் ஏ. எச். எம்.அஸ்வர், பா.உ.**
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
இராஜாங்க அமைச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කේ. ගනේෂලිංගම් ස.වි., නි.ම.
කොළඹ නියෝජ්‍ය නගරාධිපති
க. கணேசலிங்கம்
ஜே. பீ., யூ. எம்.
கொழும்பு பிரதி மாநகர முதல்வர்
K. GANESHALINGAM J.P., U.M.
DEPUTY MAYOR OF COLOMBO

නගර ශාලාව, කොළඹ 7
நகர மண்டபம்.
கொழும்பு 7.
TOWN HALL, COLOMBO 7.

## அமரர் வே. பாலசுப்பிரமணியம்

யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் கரவெட்டியைப் பிறப்பிடமாகக்கொண்ட அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவரும், சமூகத் தொண்டனுமாகிய திரு. வே. பாலசுப்பிரமணியம் அவர்கள் சிவபதம் அடைந்துவிட்டார். அமரர் பாலாவை வடமராட்சியில் பள்ளிப் பராயம் முதல் நான் நன்கறிவேன். சிறுபராயத்திலும்கூட பழகுவதற்குப் பண்பான மனிதன் அவார்.

பள்ளிப் பருவத்திலேயே தம்மூர் மக்களுக்கு உதவுவதில் ஆர்வம் காட்டிய திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் கொழும்பை வதிவிடமாகக் கொண்டிருந்தபோதும் தமது ஊரவர்களைக் காணும்போதெல்லாம் அவர்களை உபசரித்து பல தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்புக்களையும் பெற்றுக் கொடுத்த செம்மல் அவர்.

கொழும்பு மாநகரில் வறியோரும் பணக்காரரும் படித்தோரும் பாமரரும் பாலாவிடம் அன்புடன் அளவளாவுதலைக் கண்டு உவகை கொண்டோர் பலர். அந்நோக்கில் 'வடமராட்சிக்கு' ஒரு "கலங்கரை விளக்கு" அன்பன் பாலா.

அன்பன் "பாலா" வின் இறுதிச்சடங்கில் அமைச்சர்கள், அரச உயர் அதிகாரிகள், கொழும்பு மாநசர சபை அலுவலர்கள் முதல் சகல இன, மதத்தவர்களும் கலந்து தமது இறுதி அஞ்சலியினைச் செலுத்தியபோது, அவரூர் நண்பனான நானும் பங்குபற்றி எனது இறுதி அஞ்சலியைச் செலுத்தினேன்.

அமரர் "பாலா" ஒரு சிவதொண்டன், சமூகப் பணியாளன், விளையாட்டுப் பிரியன். அவரது ஆன்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல சிவபெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

**கனகசபை கணேசலிங்கம்**
பிரதி முதல்வர்,
கொழும்பு மாநகர சபை.
5 /8 /1992.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LYKA LABS LIMITED

The news of Mr. Balasubramaniam's demise has saddened us all in Lyka. Mr. Bala, as he is known affectionately, had had a charisma, and was the force to be reckoned with. He was the prime mover in stitching things up with Lyka for the launch of its medicines in Sri Lankan's oil.

His dynamism and determination brought both Robert Hall & Co. Ltd., and Lyka Labs together, to grow from a minuscule operation from way back 1979, to a level now yet indefinable. He looked towards future, past being a guide.

His sudden disappearance is a void in the structure he built, and indeed irreplaceable. In the hour of grief we. all send our heartfelt condolences to the bereaved family and to the employees of RHC.

**DINESH ZAVERI** **R.A. S. MANI IYAR**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Health Care Group
Novo Nordisk A/S

Far East Regional Office
MAS Building 17-03-05
From: Henrik Glarb
Regional Manager - West Asia
10 Shenton Way

Singapore 0207
30 th. July 1992

It is not our company's policy to issue write-ups on business associates, hence, I suggest you just make a statement as follows:

The Management and Staff of Novo Nordisk A/S, Singapore wishes to extend its sincerest condolences for sad demise of Mr. V. Balasubramaniam, founder and Chairman of Robert Hall & Co.

Novo Nordisk A/S + logo
Far East Regional Office
Singapore

Kind regards

**Henrik Glarbo**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LATE MR. V. BALASUBRAMANIAM

I wish to record with sadness the demise of Mr. V. Balasubramaniam, affectionately known to his wide circule of friends as 'Bala'.

Bala was a great benefactor of the game of Hockey, and the Sri Lanka Hockey Federation benefitted much through his generosity.

No. 24, Gregory's Road, was a familiar place to many foreign Hockey teams, where Bala entertained lavishly.

I have known Bala for 35 years. In 1986, he readily agreed to donate a Trophy for one of our Annual Tournaments and called it ***"THE COBAMILS LIMITED TROPHY".***

It ewas well known that Bala helped many other Sports Bodies and charitable institutions.

He gave much and expected nothing in return. Sympathy is a key that fits any heart - he had it in abundánce. This was just one of his many qualities.

My Association and I wish to extend our heartfelt sympathies to his wife Shanthi, his sons and the other members of his family.

He was a good man.

May his soul rest in peace.

**Dennis de Rosayro**
*President*
*Mercantile Hockey Association.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Trade Services Ceylon Limited
29, Bristol street,
Colombo. Sri Lanka.

*For the attention of Vive*

Dear Sirs.

The directors and staff of John Brown Engineering Limited, Clydebank, Scotland, wish to record the company's appreciation of our representative, Mr. Balasubramaniam's constant support over many years business in Sri Lanka.

All of his many friends at John Brown offer their sincere sympathy and condolences on the passing of their good friend and colleague.

Yours faithfully,

**for JOHN BROWN ENGINEERING LIMITED**

*D. M. Galloway*

*General Sales Manager*
*CUSTOMER SERVICES DIVISION*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் அவர்களின் வாழ்வும் பணியும்

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த கரவெட்டிக் கிராமத்திலே, வைத்திய அதிகாரி அமரர் உயர்திரு வேலுப்பிள்ளை அவர்களுக்கும், தங்கம் போல் மனசு உடைய அமரத்துவமடைந்த தங்கம்மா அம்மையாருக்கும், மூத்த புதல்வனாக 1931ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 3 ஆந் நாளில், கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்தார் அமரர் வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் அவர்கள். கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்தவராகையினால் கார்த்திகேயக் கடவுளின் திருநாமங்களில் ஒன்றான பாலசுப்பிரமணியம் என்ற நாமத்தினைப் பெற்றோர் இவருக்குச் சூட்டிக் கொண்டனர். பெற்றோர், 'இராசா' என்ற செல்லப் பெயராலேயே இவரை அழைத்து வந்தனர். மற்று, நண்பர்கள் இவரை "டொக்டர்" என்றே அன்பாக அழைத்து மகிழ்ந்தனர். திருமதி மகேஸ்வரி நடராசா, திரு.வேலுப்பிள்ளை சிவஞானம், திருமதி. புஷ்பவதி சபாநாயகம் ஆகிய மூவரும் அன்னாரது அன்புச் சகோதரர்கள் ஆவார்கள்.

இவர் ஆரம்பக்கல்வியையும், இடைநிலைக்கல்வியையும் யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் பயின்று, பின்பு உயர்கல்வியினை கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் தொடர்ந்து, அடுத்து யா/ இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றிற் பூர்த்தி செய்தார்.

கல்லூரிக் கல்வியினை முடித்துக் கொண்டு "உத்தியோகம் புருஷலட்சணம்" என்ற விருது வாக்கியத்துக்கேற்ப தனியார்துறையில் உத்தியோகம் தேடிப் பெற்றுக் கொண்டார். ஆரம்பத்திலேயே இலட்சுமிகடாட்சம் இவரை அணுகத் தொடங்கியது போலும். இவர், 'ஷெல்' பெற்றோலியக் கம்பனியிலும், துறைமுகக் கூட்டுத்தாபனத்திலும் நிதி தொடர்புடைய 'சிறாப்பர்' பதவிகளையே வகிக்கலானார். மேலும் திருமகளின் அருட்சக்தி உண்ணின்று உடற்றவும் தானே ஒரு பெரும் முயற்சியாளனாகவும் முதலீட்டாளனாகவும் வரவேண்டுமென்ற பேரார்வத்துடன் பெரிதும் முயன்று பெருவெற்றியும் கண்டார். "தானே தனக்கு எசமான்" என்ற எடுகோளைத் தனக்குத் தானே தாரகமந்திரமாக்கி அந்த இலக்கினுக்கும் இலக்கணமாக வாழ்ந்து காட்டிய உன்னத மனிதன்தான் அமரர் பாலசுப்பிரமணியம் அவர்கள்.

வட கொழும்புக் கொட்டாஞ்சேனையில் வாழ்ந்து வந்த அமரர் சி. சரவணமுத்து, திருமதி இராஜேஸ்வரி சரவணமுத்து தம்பதிகளின் மூத்த புதல்வியான சாந்தி அம்மையாரை 1974 ஆம் ஆண்டினில் திருமணஞ் செய்து கொண்டார். இவர்களின் இரு புதல்வர்கள் உகந்தன், கார்த்திகேயன் ஆவர்.

அவரால் நிறுவி நிர்வகிக்கப்பட்டு வந்த நிறுவனங்களுட் குறிப்பிடத்தக்கவை, 'சாந்தி விஹார்' "ஹோட்டல் எம்பிறஸ்," "கோபா மில்", றொபேட் கோல், கொன்சொலிடேட்டட் பெயரிங் சப்ளை ஆகியவையும் இன்னபிறவு மாம். "தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி மெய்வருந்தக் கூலி தரும்" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவன் வாக்கிற்கு இயைய முயற்சியால் உயர்ந்த உதாரண புருஷன் பாலா அவர்களின் நினைவுச் சின்னங்களாக மேற்படி நிறுவனங்கள் விளங்குகின்றன.

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்தலாகாது, என்று ஔவையார் சொன்ன இந்த அறிவுரையினைச் சின்ன வயதுதிலேயே உள்ளத்திருத்தி உணர்ந்து கொண்டவர் பாலா. எனவே

"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வழி எஞ்சல்
எஞ்ஞான்றும் இல்"

என்ற மறைவாக்கிற்கு அமைய பழிபாவத்துக் அஞ்சி, முயற்சியால் தேடிக் கொண்ட செல்வங்களையும் பகுத்துக் கொடுத்து வாழ்ந்து வந்த பண்பாளன் பாலசுப்பிரமணியம். சமயப்பணிகளுக்காகவும், சமூகப்பணிகளுக்காகவும், கல்விப்பணிகளுக்காகவும் வாரி வாரி வழங்கிய அவரது வள்ளன்மை சொல்லுந்தரம் அன்று. கோவில் திருப்பணிகளுக்கு வாரி வழங்கிய செல்வம் கொஞ்சம் அன்று. குறிப்பாக, திருக்கேதீச்சுவர ஆலயத்துக்கு அர்ப்பணித்த அழகான தேரும், திருக்கோணேஸ்வரத்தில் அமைக்கப்பெற்ற நவக்கிரகக் கோவிலும், மாமல்லபுரத்திலிருந்து தருவித்து மேற்படி கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள நவக்கிரகங்களும் அன்னாரின் சமயத் தொண்டுக்குச் சான்றுபகரும். மேலும், அகில இலங்கை இந்து மாமன்றத்துக்குத் தலைவராகப் பதவியேற்றதும், இந்து மாமன்றக் கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று திட்டம் இட்டார். பல வருடங்களாக இழுபட்டு வந்த நிலைமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார். நிதி மிகுந்தவர்களிடம் பொற்குவை வாங்கியும், நிதி குறைந்தவர்களிடம் காசுகள் வாங்கியும், நிதியின் ஒரு பகுதியினைத் தானே தாங்கியும், கொழும்பு மாநகரிலே இந்து மாமன்றத்துக்கான கட்டிட வேலைகளை ஆரம்பித்து வைத்தார். பிரமாண்டமான மூன்று மாடிகளைக் கொண்ட இந்து மாமன்றக் கட்டிடம் இன்று நிறைவுறும் தறுவாயிலுள்ளது. பாலா அவர்களின் பரோபகாரப் பண்புக்கு இந்து மாமன்றம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக எப்போதும் நின்று விளங்கும்.

கல்விப்பணிக்காகவும் வாரிவழங்க வேண்டும் என்ற ஆவலுடையவராக இருந்தார் அமரர். தான் கற்ற பழைய பாடசாலையினை மறவாது, அதாவது கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரிக்கு நீர்த்தாங்கி, குடிநீர்க்குழாய் வசதிகள் ஆகியவற்றை அமைத்துக் கொடுத்தார். கொழும்பு இந்துக் கல்லூரிக்கு ஒரு விஞ்ஞான கூடத்தை அமைத்து உதவினார். கல்வி, உயர்கல்வி அமைச்சு எடுத்த தமிழ்மொழித்தினவிழாக்களுக்கு உணவு வசதி, விளம்பரங்கள் ஆகியன அளித்துத் தமது உதாரகுணத்தினை எடுத்துக் காட்டினார். இவ்வாறாக இப்பெருமகனார் செய்த பெருங்கொடைகள் காலத்தால் அழியாதன ஆகும். உதவி கேட்டு வருவோர் யாருமே இவரிடம் உதவி பெறாமற் சென்றது கிடையாது. இவரால் நிறுவப்பட்ட நிறுவனங்கள் இலாபத்தைச் சம்பாதிப்பது ஒரு புறம் இருக்க ஆயிரக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பு அளித்துக் கொண்டிருக்கின்றன என்பதே அமரர் பாலா அவர்களின் பெருமையை விளங்கச் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் மிகுதியாக நேசிப்பவர்களேயே இறைவன் விரைவாகத் தன்னிடம் அழைத்துக் கொள்கின்றார். அழைக்கு முன்பதாக ஆண்டவன் தரும் சோதனைகளே வேதனைகளாகத் தென்படுகின்றன. ஊனினை உருக்கியே, உள்ளொளி பரப்பி, தேனினும் இனிய சிவபதம் அளிக்கப்படுகின்றது. இந்த வகையிலேயே அமரர் பாலா அவர்களும் சொற்பநாள் பட்ட உடல் வருத்தம் சொல்லுந்தரம் அன்று. அப்போதும் "வல்ல குருநாதன் நம்மை வருத்துவது கொல்ல அல்ல, கொல்ல அல்ல, பொல்லாப் பிணி தீர்க்க" என்ற மனஉறுதியுடன் சகித்துக் கொண்டு இறுதியில் திடீரென (15.7.92) ல் இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னாரது பிரிவு அவரது அன்புத் துணைவியார் சாந்தி அம்மையார் அவர்கட்கும், புத்திரர்கள் உகந்தன், கார்த்திகேயன் ஆகியோருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பே ஆகும்.

சுற்றமும் கிளையும் பெற்றபிறந்த கன்று போல துயருற்றுச் சோருகின்றன. அகில இலங்கை இந்துமாமன்றம் அதன் தனித்துவம் வாய்ந்த தலைவரை இழந்து நிற்கின்றது.

எனினும்,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த
வள்ளல் பாலா அவர்கள்
வானுறையும் தெய்வத்துட்
தெய்வமாகியிருப்பார் என்று
தேறுதல் பெற்றிருப்பார்களாக.

அவரது ஆன்மா சாந்தி பெற ஆண்டவன் அருள்பாலிப்பானாக.

மைத்துனர்,

வெ.சபாநாயகம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு வே. பாலசுப்பிரமணியம் அவர்கள்

அமரத்துவம் எய்திய ஞான்று

## 'விக்னேஸ்வரா'

### சிந்திய கண்ணீர் முத்துக்கள்

காட்சியில் எளியனாகிக் கனிமொழி பேசும் வள்ளல்
தாட்சியே நோக்கானாகித் தயவுளம் காட்டி எங்கும்
மாட்சிமை சேர்க்கவல்லான் மகிழ்வுறும் நண்பனாகிப்
பூட்கையால் ராவையூரைப் புகழ்பெற வைத்தானன்றே

பிறந்ததன் மண்ணை என்றும் நேசிக்கும் கொள்கை தன்னால்
பிறந்துமே மொழிபயின்ற பள்ளிசேர் பாலர்க்காகச்
சிறந்துமே விளங்குகின்ற விக்னேஸ்வராக் கூடந்தன்னில்
அறம்புரி செயலாய் நீரைக்குழாய் வழியனுப்பி வைத்தான்

பாரியே என்றுபோற்றப் புகழுடன் வாழ்ந்த பாலா
பாரினில் மலையில்தீபம் சூறையால் அணைந்தான் அந்தோ
தேரினில் சந்தனம்போல் பிறர் மணம் வீசவைத்துக்
கதிரே போலக் கண்ணீரில் மறந்தானின்றே

பணம் பொருள் ஓங்க ஓங்கத் தெய்வமும் மனத்தில் ஓங்க
கிணங்கியே இந்து மன்றத்தலைவனாய் ஆக்கம் செய்யும்
குணமுடைப் பாலன் ஆத்மா ஒளிபெற என்றும் என்றும்
வணங்குவம் இறையைனாமும் வாழ்த்துவோம்

அதிபர்
ஆசிரியர்கள், மாணவர்கள்
கரவெட்டி
யா/ விக்னேஸ்வரக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைந்த தலைவருக்கு

### அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அஞ்சலி

கடந்த ஐந்து ஆண்டுகளில் அகில இலங்கை இந்து மாமன்றத்தினைத் தலைமை தாங்கி மாமன்றத்தின் பெருமையையும் புகழையும் உயர்த்தி வளர்த்துவிட்ட பெருமகன் திரு. வே. பாலசுப்பிரமணியம் அவர்களின் மறைவு மாமன்றத்திற்கு என்றும் ஈடுசெய்யமுடியாத இழப்பாகும்.

இந்நாட்டின் தலைநகரில் மாமன்றத்திற்கென அரசாங்கம் ஒதுக்கித் தந்த காணியில் மாமன்றத் தலைமையகத்தினைக் கட்டப் பல முயற்சிகள் 1970 முதல் எடுக்கப்பட்டிருந்தன. ஆனால் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட பல தடைகள் முட்டுக்கட்டைகளால் அம்முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறவில்லை. இப்பின்னணியில் தலைமைத்துவம் ஏற்ற திரு. பாலசுப்பிரமணியம் மாமன்றத் தலைமையகக் கட்டிடத்தினைக் கட்டிடுவேன் எனச் சூளுரைத்தார். அம்முயற்சியில் மாமன்றத்தினை தலைமைத் தாங்கி வழி நடத்தினார். வெற்றியும் கண்டார் என்றே சொல்லவேண்டும். இருபது ஆண்டுகளாகத் தேங்கி நின்ற கட்டட வேலைகள் கடந்த இரு ஆண்டுகளாக எவரும் எதிர்பாராத வகையில் துரித முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. அதற்கு முதல் காரணகர்த்தா எங்கள் மறைந்த தலைவர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்களே.

மாமன்றத் தலைமையகத்தைக் கட்டப்போகிறோம் என்ற உறுதியுடன் 31.10.1990 அன்று வேலைகள் மீண்டும் ஆரம்பமானபோது கட்டடவேலைகள் உண்மையில் நடக்கும் என்ற நம்பிக்கையை மக்களிடையே ஏற்படுத்துவது மிகவும் கஷ்டமாக இருந்தது. அந்த நம்பிக்கையினை உருவாக்காது எதுவித முன்னேற்றமும் அடைய முடியாது என உணர்ந்த அமரர் தானே முதற் கட்ட வேலைகளின் செலவைப் பொறுப்பேற்றுக் கட்டட வேலைகளை முடுக்கிவிட்டார். அதன் பயனாகத்தான் கட்டடம் கட்டப்படுகிறது என்ற நம்பிக்கை பிறந்தது. மாமன்றக் கட்டடம் எழும்புமா? என வினவப் பலர் இருந்தனர். ஆனால் 'எழும்பும்' என்ற உறுதியான விடையைத் தர ஒரே ஒரு நபர் தான் முன் வந்தார்.- இவ்வாறாக ஆக்கமும் ஆதரவும் தந்த திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் கட்டட வேலைகள் நாலாம் மாடியை அடைந்திருக்கும் நிலையில் அமரத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றது மிகவும் துரதிஷ்டமே. அவர் மாமன்றத் தலைமையகத்தைக் கட்டி முடித்துத் திறப்பு விழாவும் நடத்துவார் என்று நம்பியிருந்தோம் அந் நம்பிக்கையைத் தந்து மாமன்றத்தினை வழி நடத்தியவர் இறையடி சேர்வதற்கு இன்னும் பல ஆண்டுகள் உண்டு என்று நம்பி இருந்த மாமன்றத்தினருக்கு யூலைத் திங்கள் பதினைந்தாம் நாள் மாலை ஆறு மணிக்குப் பேரிடி விழுந்தது.-

திரு. பாலசுப்பிரமணியம் அவர்களின் மகத்தான பணியினை ஒரு சில வார்த்தைகளில் எடுத்தியம்ப முடியாது. அவரின் சேவையின் பெருமையினை மாமன்றக் கட்டடத்தின் ஒவ்வொரு கல்லும் காலங் காலமாகப் பறைசாற்றி நிற்கும்.

வசதியுடன் வாழ்ந்தவர் என்றாலும் ஒவ்வொருவருடனும் இனிமையாகப் எளிமையாகப் பழகிய அருமை நண்பர் அவர். உதவி நாடி வந்தவருக்கு ஏமாற்றம் தராது தாராளமாக அள்ளி வழங்கிய கொடை வள்ளல். எல்லோரையும் வாழ வைக்கவேண்டும் எனப் பெரு மனத்துடன் பணிகள் பல புரிந்த தொண்டர் எங்கள் மறைந்த தலைவர்.

அமரர் பாலாவின் மறைவால் வாடுகின்ற அகில இலங்கை இந்து மாமன்றச் செயற்குழு, முகாமைக் குழு, அங்கத்துச் சங்கங்கள் ஆகியவற்றின் அங்கத்தவர்களின் உள்ளக் குமுறலை வார்த்தைகளாக வடித்துக் கூறமுடியாது.

மறைந்த தலைவரின் ஆத்மா சாந்தியடையும்வகையில் மாமன்றத் தலைமைக் கட்டடத்தினைக் கூடிய விரைவில் கட்டி முடிப்போம் என்று மாமன்றத்தின் சார்பில் உறுதி மொழி அளித்து, அமரரின் மனைவி திருமதி சாந்திக்கும் பிள்ளைகளுக்கும் சகோதரங்களுக்கும் ஏனைய குடும்ப அங்கத்தினர்களுக்கும் குடும்ப அங்கத்தினர்களுக்கும் மாமன்றத்தின் சார்பில் அனுதாபம் தெரிவித்து அவர்களின் துயரில் நாங்களும் பங்கேற்றிருக்கின்றோம் என்று ஆறுதலையும் தெரிவித்துக்கொண்டு அமரரின் ஆத்மா சாந்தியடைய இறையடி பணிந்து நிற்கின்றேன்.

**வி. கயிலாசபிள்ளை**
துணைத் தலைவர்
அகில இலங்கை இந்து மாமன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# சைவசமய குரவர்

# தேவாரப்பதிகங்கள்

## திருப்பிரமபுரம்

பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகல னாப்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலு டையார்பெரியார்கழல் கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவின வெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய வோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி விளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தென துள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவர வம்மலர்க்கொன்றை மலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

ஒருமைபெண்மையுடை யன்சடையன்விடை யூரும்மிவனென்ன
அருமையாகவுரை செய்யவமர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர் காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைகலந்தவொலி பாடலோடாடல ராகிமழுவேந்தி
இறைகலந்தவின வெள்வளைசோரவென் னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழினீடுயர் சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

சடைமுயங்குபுன லன்னனலன்னெரி வீசிச்சதிர்வெய்த
உடைமுயங்குமர வோடுழிதந்தென துள்ளங்கவர்கள்வன்
கடன்முயங்குகழி சூழ்குளிர்கானலம் பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம்விளைவித்த
உயரிலங்கையரை யன்வலிசெற்றென துள்ளங்கவர்கள்வன்
துயரிலங்கும்முல கிற்பலவூழிக டோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

தாணுதல்செய்திறை காணியமாலொடு தண்டாமரையானும்
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென துள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மக ளீர்முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

புத்தரோடுபொறி யில்சமணும்புறங் கூறநெறிநில்லா
ஒத்தசொல்லவுல கம்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர் மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய பெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தனுரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தலெளிதாமே.

திருச்சிற்றம்பலம்

## நமச்சிவாயத் திருப்பதிகம்

பண் - கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னும நமச்சி வாயவே.

நம்பு வாரவர்* நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலாம்
நம்ப னும நமச்சி வாயவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்
தக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்க னாம நமச்சி வாயவே.

இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன னாம நமச்சி வாயவே.

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீங்குவ ரென்பரால்
நல்லார் நாம நமச்சி வாயவே.

மந்த ரம்மன பாவங்கண் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாம நமச்சி வாயவே.

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரத னாம நமச்சி வாயவே.

இலங்கை மன்ன னெடுத்த வடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொ ணாம நமச்சி வாயவே.

போதன் போதன கண்ணனு மண்ணறன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓது நாம நமச்சி வாயவே

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட வமுதுசெய்
நஞ்சுண்* கண்ட னமச்சி வாயவே.

நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாச மறுக்கவல் லார்களே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

மற்றுப்பற்றெனக் கின்றிநின்றிருப்
பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேனினிப்பிற
வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநாநமச்சிவாயவே.

இட்டனும்மடி யேத்துவாரிகழ்ந்
திட்டநாண்மறந் திட்டநாள்
கெட்டநாளிவை யென்றலாற்கரு
தேன்கிளர்புனற் காவிரி
வட்டவாசிகை கொண்டடிதொழு
தேத்துபாண்டிக் கொடுமுடி
நட்டவாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநாநமச்சி வாயவே.

ஓவுநாளுணர் வழியுநாளுயிர்
போகுநாளுயர் பாடைமேல்
காவுநாளிவை யென்றலாற்கரு
தேன்கிளர்புனற் காவிரிப்
பாவுதண்புனல் வந்திழிபரஞ்
சோதிபாண்டிக் கொடுமுடி
நாவலாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநாநமச்சி வாயவே.

எல்லையில்புக ழெம்பிரானெந்தை
தம்பிரானென்பொன் மாமணி
கல்லையுந்தி வளம்பொழிந்திழி
காவிரியதன் வாய்க்கரை
நல்லவர்தொழு தேத்துஞ்சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
வல்லவாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநாநமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சினார்க்கர ணாதியென்றடி
யேனுநான்மிக வஞ்சினேன்
அஞ்சலென்றடித் தொண்டனேற்கரு
ளல்கினாய்க்கழி கின்றதென்
பஞ்சின்மெல்லடிப் பாவைமார்குடைந்
தாடுபாண்டிக் கொடுமுடி
நஞ்சணிகண்ட நான்மறக்கினுஞ்
சொல்லுநாநமச்சி வாயவே.

ஏடுவானிளந் திங்கள்சூடினை
யென்பின்கொல்புலித் தோலின்மேல்
ஆடுபாம்ப தரைக்கசைத்த
வழகனேயந்தண் காவிரிப்
பாடுதண்புனல் வந்திழிபரஞ்
சோதிபாண்டிக் கொடுமுடிச்
சேடனேயுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநாநமச்சி வாயவே.

விரும்பிநின்மலர்ப் பாதமேநினைந்
தேன்வினைகளும் விண்டனன்
நெருங்கிவண்பொழில் சூழ்ந்தெழில்பெற
நின்றகாவிரிக் கோட்டிடைக்
குரும்பைமென்முலைக் கோதைமார்குடைந்
தாடுபாண்டிக் கொடுமுடி
விரும்பனேயுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநாநமச்சி வாயவே.

செம்பொனேர்சடை யாய்திரிபுரந்
தீயெழச்சிலை கோலினாய்
வம்புலாங்குழ லாளைப்பாக
மமர்ந்துகாவிரிக் கோட்டிடைக்
கொம்பின்மேற்குயில் கூவமாமயி
லாடுபாண்டிக் கொடுமுடி
நம்பனேயனை நான்மறக்கினுஞ்
சொல்லுநாநமச்சி வாயவே.

சாரணன்றந்தை யெம்பிரானெந்தை
தம்பிரானென்பொன் மாமணியென்று
பேரெணாயிர கோடிதேவர்
பிதற்றிநின்று பிரிகிலார்
நாரணன்பிர மன்றொழுங்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடிக்
காரணாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநாநமச்சி வாயவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணியபிறை சூடியைக்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
பேணியபெரு மானைப்பிஞ்ஞகப்
பித்தனைப்பிறப் பில்லியைப்
பாணுலாவரி வண்டறைகொன்றைத்
தாரனைப்படப் பாம்பரை
நாணனைத்தொண்ட னூரன்சொல்லிவை
சொல்லுவார்க்கில்லைத் துன்பமே.

திருச்சிற்றம்பலம்

## நமச்சிவாயத்திருப்பதிகம்

## பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கல நமச்சி வாயவே.

விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே.

இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளி னுமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே.

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கல மருமறை யாறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கல நமச்சி வாயவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமில ளொடொறு நல்கு வானலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே.

விடிஞ் ருலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடிஞ் ரந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினே ஞெடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினே ஞடிற்று நமச்சி வாயவே.

இல்லக விளக்கது விருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறி யேசர ணுத றிண்ணமே
அந்நெறி யேசென்றங் கடைத்த வர்க்கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே.

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே.

திருச்சிற்றம்பலம்

## திருவாலவாய்

### திருநீற்றுப்பதிகம்

பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் றிருவால வாயான் றிருநீறே.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் றிருநீறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் றிருநீறே.

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் றிருநீறே.

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு வந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் றிருநீறே.

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் றிருநீறே.

எயிலது வட்டது நீறு விருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் றிருநீறே.

இராவணன் மேலது நீறு வெண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயான் றிருநீறே.

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் றிருநீறே.

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடாக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மால வாயான் றிருநீறே.

ஆற்ற லடல்விடை யேறு மாலவா யான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கேதீச்சரம்

### பண் - நட்டபாடை

*திருச்சிற்றம்பலம்*

***நத்தார்புடை ஞானன்பசு வேறிந்தனை கவிழ்வாய்***
***மத்தம்மத யானையுரி போர்த்தமழு வாளன்***
***பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்***
***செத்தாரெலும் பணிவான்றிருக் கேதீச்சரத் தானே.***

***சுடுவார்பொடி நீறுந்நல துண்டப்பிறைக் கீளும்***
***கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்***
***படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்***
***திடமாவுறை கின்றான்றிருக் கேதீச்சரத் தானே.***

***அங்கம்மொழி யன்னாரவ ரமரர்தொழு தேத்த***
***வங்கம்மலி கின்றகடன் மாதோட்ட நன் னகரில்***
***பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்***
***செங்கண்ணர வசைத்தான்றிருக் கேதீச்சரத் தானே.***

***கரியகறைக் கண்டன்னல கண்மேலொரு கண்ணான்***
***வரியசிறை வண்டியாழ்செயு மாதோட்ட நன் னகருள்***
***பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேல்***
***தெரியும்மறை வல்லான்றிருக் கேதீச்சரத் தானே.***

***அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி***
***வங்கம்மலி கின்றகடன் மாதோட்ட நன் னகரில்***
***பங்கஞ்செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்***
***தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே.***

***வெய்யவினை யாயவ்வடி யார்மேலொழித் தருளி***
***வையமலி கின்றகடன் மாதோட்ட நன் னகரில்***
***பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்***
***செய்யசடை முடியான்றிருக் கேதீச்சரத் தானே.***

***ஊனத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி***
***வானத்துறு மலியுங்கடன் மாதோட்ட நன் னகரில்***
***பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்***
***ஏனத்தெயி றணிந்தான்றிருக் கேதீச்சரத் தானே.***

***அட்டன்னழ காகவ்வரை தன்மேலர வார்த்து***
***மட்டுண்டுவண் டாலும்பொழின் மாதோட்ட நன் னகரில்***
***பட்டவ்வரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்***
***சிட்டன்னமை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவரென விருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழின் மாதோட்ட நன் னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவன்றனை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே.

கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார்பொழில் வண்டியாழ்செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புக ழூரன்னடித் தொண்டன்னுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ்சொலக் கூடாகொடு வினையே.

திருச்சிற்றம்பலம்

## திருக்கோணமலை

பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
 நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
 வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு
 மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோத நித்திலங் கொழிக்குங்
 கோணமா மலையமர்ந் தாரே.

கடிதென வந்த கரிதனை யுரித்து
 வவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
 பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
 கொள்ளமு னித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
 கோணமா மலையமர்ந் தாரே.

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
 படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக
 மாகமுன் கலந்தவர் மதின்மேல்
தனித்தபே ருருவ விழித்தழ லுகந்
 தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
 கோணமா மலையமர்ந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் றேவி வேண்டமுன் கொடுத்த
விமலனுர் கமலமார் பாதர்
தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றரளஞ்
செம்பொனு மிப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

தாயினு நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினு மனத்து மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ண முதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவன் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே.

எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலா
லேத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பு
மிறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே.

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரு மறியா வண்ணமொள் ளெரியா
யுயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்குங்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றுணுஞ் சமணு மிருந்துணுந் தேரு
    நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசின ரொருபான்
    மெல்லிய லொடுமுட னாகித்
துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து
    தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங்
    கோணமா மலையமர்ந் தாரே.

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
    கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
    கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்து
    முரைப்பவர் கேட்பவ ருயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
    தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

திருச்சிற்றம்பலம்

## திருக்குறுந்தோகை

திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே.

அரும்பற் றப்பட் வாய்மலர் கொண்டுநீர்
சுரும்பற் றப்படத் தூவித் தொழுமினோ
கரும்பற் றச்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பெரும்பற் றப்புலி யூரெம் பிரானையே.

அரிச்சுற் றவினை யாலடர்ப் புண்டுநீர்
எரிச்சுற் றக்கிடந் தாரென் றயலவர்
சிரிச்சுற் றுப்பல பேசப்ப டாமுனந்
திருச்சிற் றம்பலஞ் சென்றடைந் துய்ம்மினே.

அல்ல லென்செயு மருவினை யென்செயுந்
தொல்லை வல்வினைத் தொண்டன்று னென்செயுந்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனூர்க்
கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனி லாவி யுயிர்க்கும் பொழுதெலாம்
நானி லாவி யிருப்பனென் னாதனைத்
தேனி லாவிய சிற்றம் பலவனார்
வானி லாவி யிருக்கவும் வைப்பரே.

சிட்டர் வானவர் சென்று வரங்கொளுஞ்
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலத்துறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லுமச்
சிட்டர் பாலணு கான்செறு காலனே.

ஒருத்த னாருல கங்கட் கொருசுடர்
திருத்த னார்தில்லைச் சிற்றம் பலவனார்
விருத்த னாரிளை யார்விட முண்டவெம்
அருத்த னாரடி யாரை யறிவரே.

விண்ணி றைந்ததோர் வெவ்வழ லின்னுரு
எண்ணி றைந்த விருவர்க் கறிவொணாக்
கண்ணி றைந்த கடிபொழி லம்பலத்
துண்ணி றைந்துநின் றாடு மொருவனே.

வில்லைவட் டப்பட வாங்கி யவுணர்தம்
வல்லைவட் டம்மதின் மூன்றுடன் மாய்த்தவன்
றில்லைவட் டத்திசை கைதொழு வார்வினை
ஒல்லைவட் டங்கடந் தோடுத லுண்மையே.

நாடி நாரண னான்முக னென்றிவர்
தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்
தாடி பாதமென் னெஞ்சு ளிருக்கவே.

மதுர வாய்மொழி மங்கையோர் பங்கினன்
சதுரன் சிற்றம் பலவன் றிருமலை
அதிர வார்த்தெடுத் தான்முடி பத்திற
மிதிகொள் சேவடி சென்றடைந் துய்ம்மினே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவதிகைவீரட்டானம்

### பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
    கொடுமை பலசெய் தனநா னறியேன்
ஏற்றா யடிக்கே யிரவும் பகலும்
    பிரியா துவணங் குவனெப் பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
    குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
    வீரட்டானத் துறையம் மானே.

நெஞ்சம் முமக்கே யிடமா கவைத்தே
    னினையா தொருபோ துமிருந் தறியேன்
வஞ்சம் மிதுவொப் பதுகண் டறியேன்
    வயிற்றோ டுதுடக் கிமுடக் கியிட
நஞ்சா கிவந்தென் னைநலி வதனை
    நணுகா மற்றுரந் துகரந் துமிடீர்
அஞ்சே லுமென்னீ ரதிகைக் கெடில
    வீரட்டானத் துறையம் மானே.

பணிந்தா ரனபா வங்கள்பாற் றவல்லீர்
    படுவெண் டலையிற் பலிகொண் டுழல்வீர்
துணிந்தே யுமக்காட் செய்துவா ழலுற்றாற்
    சுடுகின் றதுசூ லைதவிர்த் தருளீர்
பிணிந்தார் பொடிகொண் டுமெய்பூ சவல்லீர்
    பெற்றமேற் றுகத்தீர் சுற்றும்வெண் டலைகொண்
டணிந்தீ ரடிகே ளதிகைக் கெடில
    வீரட்டானத் துறையம் மானே.

முன்னம் மடியே னறியா மையினான்
    முனிந்தென் னைநலிந் துமுடக் கியிடப்
பின்னை யடியேன் உமக்கா ளும்பட்டேன்
    சுடுகின் றதுசூ லைதவிர்த் தருளீர்
தன்னை யடைந்தார் வினைதீர்ப் பதன்றோ
    தலையா யவர்தங் க்டன் ஆவதுதான்
அன்ன நடையா அதிகைக் கெடில
    வீரட்டானத் துறையம் மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தாள் பவர்கா வலிகழ்ந் தமையாற்
கரைநின் றவர்கண் டுகொளென் றுசொல்லி
நீத்தா யகயம் புகநூக் கியிட
நிலைக்கொள் ளும்வழித் துறையொன் றறியேன்
வார்த்தை யிதுவொப் பதுகேட் டறியேன்
வயிற்றோ டுதுடக் கிமுடக் கியிட
ஆர்த்தார் புனலா ரதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

சலம்பூ வொடுதூ பமறந் தறியேன்
றமிழோ டிசைபா டன்மறந் தறியேன்
நலந்தீங் கிலுமுன் னைமறந் தறியே
னுன்னா மமென்னா வின்மறந் தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வா
யுடலுள் ளுறுசூ லைதவிர்த் தருளாய்
அலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே.

உயர்ந்தேன் மனைவாழ்க் கையுமொண் பொருளு
மொருவர் தலைகா வலிலா மையினால்
வயந்தே யுமக்காட் செய்துவா ழலுற்றால்
வலிக்கின் றதுசூ லைதவிர்த் தருளீர்
பயந்தே யென்வயிற் றினகம் படியே
பறித்துப் புரட்டி யறுத்தீர்த் திடநான்
அயர்ந்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

வலித்தேன் மனைவாழ்க் கைமகிழ்ந் தடியேன்
வஞ்சம் மனமொன் றுமிலா மையினால்
சலித்தா லொருவர் துணையா ருமில்லைச்
சங்கவெண் குழைக்கா துடையெம் பெருமான்
கலித்தே யென்வயிற் றினகம் படியே
கலக்கி மலக்கிட் டுக்கவர்ந் துதின்ன
அலுத்தே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.

பொன்போ லமிளிர் வதொர்மே னியினீர்
புரிபுன் சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலை பிணியென் றிவற்றை
நணுகா மற்றுரந் துகரந் துமிடீர்
என்போ லிகளும் மையினித் தெளியா
ரடியார் படுவ திதுவே யாகில்
அன்பே யமையும் மதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்தா யங்கொரா னையின் ருரிதோல்
புறங்கா டரங்கா நடமா டவல்லாய்
ஆர்த்தா னரக்கன் றனை மால் வரைக்கீ
ழடர்த்திட் டருள்செய் தவது கருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் மெழுந்தா
லென்வே தனையா னவிலக் கியிடாய்
ஆர்த்தார் புனல்சூ ழதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே.

திருச்சிற்றம்பலம்

## மறுமாற்றத் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

நாமார்க்குங் குடியல்லோ நமனை யஞ்சோ
நரகத்தி லிடர்ப்படோ நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோ
மின்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்று மீளா வாளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே.

அகலிடமே யிடமாக வூர்க டோறு
மட்டுண்பா ரிட்டுண்பார் விலக்கா ரையம்
புகலிடமா மம்பலங்கள் பூமி தேவி
யுடன்கிடந்தாற் புரட்டாள்பொய் யன்று மெய்யே
இகலுடைய விடையுடையா னேன்று கொண்டா
னினியேதுங் குறைவிலோ மிடர்க டீர்ந்தோம்
துகிலுடுத்துப் பொன்பூண்டு திரிவார் சொல்லுஞ்
சொற்கேட்கக் கடவோமோ துரிசற் றோமே.

வாராண்ட கொங்கையர்சேர் மனையிற் சேரோ
மாதேவா மாதேவா வென்று வாழ்த்தி
நீராண்ட புரோதாய மாடப் பெற்றோ
நீறணியுங் கோலமே நிகழப் பெற்றோம்
காராண்ட மழைபோலக் கண்ணீர் சோரக்
கன்மனமே நன்மனமாக் கரையப் பெற்றோம்
பாராண்டு பகடேறி வருவார் சொல்லும்
பணிகேட்கக் கடவோமோ பற்றற் றோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவாவா ருருத்திரபல் கணத்தி னோர்க
ளுடுப்பனகோ வணத்தொடுகீ ளுளவா மன்றே
செறுவாறுஞ் செறமாட்டார் தீமை தானு
நன்மையாய்ச் சிறப்பதே பிறப்பிற் செல்லோம்
நறவார்பொன் னிதழிநறுந் தாரோன் சீரார்
நமச்சிவா யச்சொல்ல வல்லோ நாவால்
சுறவாருங் கொடியானைப் பொடியாக் கண்ட
சுடர்நயனச் சோதியையே தொடர்வுற் றோமே.

என்றுநா மியாவர்க்கு மிடைவோ மல்லோ
மிருநிலத்தி லெமக்கெதிரா வாரு மில்லை
சென்றுநாஞ் சிறுதெய்வஞ் சேர்தோ மல்லோஞ்
சிவபெருமான் றிருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினாற் குறைவுடையோ மல்லோ மன்றே
யுறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனார்
பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே.

மூவுருவின் முதலுருவா யிருநான் கான
மூர்த்தியே யென்றுமுப் பத்து மூவர்
தேவர்களு மிக்கோருஞ் சிறந்து வாழ்த்துஞ்
செம்பவளத் திருமேனிச் சிவனே யென்னும்
நாவுடையார் நமையாள வுடையா ரன்றே
நாவலந்தீ வகத்தினுக்கு நாத ரான
காவலரே யேவி விடுத்தா ரேனுங்
கடவமலோங் கடுமையொடு களவற் றோமே.

நிற்பனவு நடப்பனவு நிலனு நீரு
நெருப்பினொடு காற்றாகி நெடுவா னாகி
அற்பமொடு பெருமையுமா யருமை யாகி
யன்புடையார்க் கெளிமையதா யளக்க லாகாத்
தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானு மியானு
மாகின்ற தன்மையனை நன்மை யோடும்
பொற்புடைய பேசக் கடவோம் பேயர்
பேசுவன பேசுதுமோ பிழையற் றோமே.

ஈசனையெவ் வுலகினுக்கு மிறைவன் றன்னை
யிமையவர்தம் பெருமானை யெரியாய் மிக்க
தேசனைச் செம்மேனி வெண்ணீற் றானைச்
சிலம்பரையன் பொற்பாவை நலஞ்செய் கின்ற
நேசனை நித்தலு நினையப் பெற்றோ
நின்றுண்பா ரெம்மை நினையச் சொன்ன
வாசக மெல்லா மறந்தோ மன்றே.
வந்தீரார் மன்னவனு வான்று னாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடையுடையான் சங்கக் குழையோர் காதன்
சாம்பலும் பாம்பு மணிந்த மேனி
விடையுடையான் வேங்கை யதள்மே லாடை
வெள்ளிபோற் புள்ளியுழை மான்றோல் சார்ந்த
உடையுடையா னம்மை யுடையான் கண்டீ
ரும்மோடு மற்று முளராய் நின்ற
படையுடையான் பணிகேட்கும் பணியோ மல்லோம்
பாசமற வீசும் படியோ நாமே.

நாவார நம்பனையே பாடப் பெற்றோ
நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம்
ஆவாவென் றெமையாள்வா னமரர் நாத
னயனொடுமாற் கறிவரிய வனலாய் நீண்ட
தேவாதி தேவன் சிவனென் சிந்தை
சேர்ந்திருந்தான் றென்றிசைக்கோன் றானே வந்து
கோவாடிக் குற்றேவல் செய்கென் றாலுங்
குணமாக்க கொள்ளோமெண் குணத்து ளோமே.

திருச்சிற்றம்பலம்

## திருக்கச்சியேகம்பம்

### பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

ஆலந் தானுகந் தமுதுசெய் தானை
யாதி யையம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாளுமை நங்கை
யென்று மேத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே.

உற்ற வர்க்குத வும்பெரு மானை
யூர்வ தொன்றுடை யானும்பர் கோனைப்
பற்றி னார்க்கென்றும் பற்றவன் றன்னைப்
பாவிப் பார்மனம் பாவிக்கொண் டானை
அற்ற மில்புக ழாளுமை நங்கை
யாத ரித்து வழிபடப் பெற்ற
கற்றை வார்சடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரியு முப்புரந் தீப்பிழம் பாகச்
செங்கண் மால்விடை மேற்றிகழ் வானைக்
கரியி னீருரி போர்த்துகந் தானைக்
காம னைக்கன லாவிழித் தானை
வரிகொள் வெள்வளை யாளுமை நங்கை
மருவி யேத்தி வழிபடப் பெற்ற
பெரிய கம்பனை யெங்கள்பி ரானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே.

குண்ட லந்திகழ் காதுடை யானைக்
கூற்று தைத்த கொடுந்தொழி லானை
வண்டலம் புமலர்க் கொன்றையி னானை
வாள ராமதி சேர்சடை யானைக்
கெண்டை யந்தடங் கண்ணுமை நங்கை
கெழுமி யேத்தி வழிபடப் பெற்ற
கண்ட நஞ்சுடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே.

வெல்லும் வெண்மழு வொன்றுடை யானை
வேலைநஞ் சுண்ட வித்தகன் றன்னை
அல்ல றீர்த்தருள் செய்யவல் லானை
யரும றையவை யங்கம்வல் லானை
எல்லை யில்புக ழாளுமை நங்கை
யென்று மேத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை யெங்கள்பி ரானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே.

திங்க டங்கிய சடையுடை யானைத்
தேவ தேவனைச் செழுங்கடல் வளரும்
சங்க வெண்குழைக் காதுடை யானைச்
சாமவேதம் பெரிதுகப் பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
'மருவி யேத்தி வழிபடப் பெற்ற
கங்கை யாளனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே.

விண்ண வர்தொழு தேத்தநின் றானை
வேதந் தான்விரித் தோதவல் லானை
நண்ணி னார்க்கென்று நல்லவன் றன்னை
நாளு நாமுகக் கின்றபி ரானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னி ரெழில்புக ழாளுமை நங்கை
யென்று மேத்தி வழிபடப் பெற்ற
கண்ணு மூன்றுடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே.

சிந்தித் தென்று நினைந்தெழு வார்கள்
சிந்தை யிற்றிக ழுஞ்சிவன் றன்னைப்
பந்தித் தவினைப் பற்றறுப் பானைப்
பாலொடா னஞ்சு மாட்டுகந் தானை
அந்த மில்புக ழாளுமை நங்கை
யாத ரித்து வழிபடப் பெற்ற
கந்த வார்சடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே.

வரங்கள் பெற்றுழல் வாளரக் கர்தம்
வாலி யபுர மூன்றெரித் தானை
நிரம்பிய தக்கன் றன்பெரு வேள்வி
நிரந்த ரஞ்செய்த நிட்கண் டகனைப்
பரந்த தொல்புக ழாளுமை நங்கை
பரவி யேத்தி வழிபடப் பெற்ற
கரங்க ளெட்டுடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே.

எள்க லின்றி யிமையவர் கோனை
யீச னைவழி பாடுசெய் வாள்போல்
உள்ளத் துள்கி யுகந்துமை நங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங் காட்டி வெருட்டிட வஞ்சி
வெருவியோ டித்தழு வவெளிப் பட்ட
கள்ளக் கம்பனை யெங்கள்பி ரானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே.

பெற்ற மேறுகந் தேறவல் லானைப்
பெரிய வெம்பெரு மானென்றெப் போதும்
கற்ற வர்பர வப்படு வானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற தென்று
கொற்ற வன்கம்பன் கூத்தனெம் மானைக்
குளிர்பொ ழிற்றிரு நாவலா ரூரன்
நற்ற மிழிவை யீரைந்தும் வல்லார்
நன்னெ றியுல கெய்துவர் தாமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோளிலி

### பண் - நட்டராகம்

### திருச்சிற்றம்பலம்

நீளநினைந்தடி யேனுமைநித்தலுங் கைதொழுவேன்
வாளனகண்மட வாளவள்வாடி வருந்தாமே
கோளிலியெம்பெரு மான்குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலையெம்பெரு மானவையட்டித் தரப்பணியே.

வண்டமருங்குழ லாளுமைநங்கையோர் பங்குடையாய்
விண்டவர் தம்புர மூன்றெரிசெய்தவெம் வேதியனே
தெண்டிரைநீர்வயல் சூழ்திருக்கோளிலி யெம்பெருமான்
அண்டமதாயவ னேயவையட்டித் தரப்பணியே.

பாதியோர்பெண்ணை வைத் தாய்படருஞ்சடைக் கங்கைவைத்தாய்
மாதர்நல்லார்வருத் தமதுநீயும றிதியன்றே
கோதில்பொழில்புடை சூழ்குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆதியேயற்புத னேயவையட்டித் தரப்பணியே.

சொல்லுவதென்னுனை நான்றெண்டைவாயுமை நங்கைநீ
புல்கியிடத்தில்வைத் தாய்க்கொருபூசல்செய் தாருளரோ
கொல்லைவளம்புற விற்குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
அல்லல்களைந்தடி யேற்கவையட்டித் தரப்பணியே.

முல்லைமுறுவ லுமையொருபங்குடை முக்கணனே
பல்லயர்வெண்டலை யிற்பலிகொண்டுழல் பாகபதா
கொல்லைவளம்புற விற்றிருக்கோளிலி யெம்பெருமான்
அல்லல்களைந்தடி யேற்கவையட்டித் தரப்பணியே.

குரவமருங்குழ லாளுமைநங்கையொர் பங்குடையாய்
பரவைபசிவருத் தமதுநீயும றிதியன்றே
குரவமரும்பொழில் சூழ்குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
அரவமசைத்தவ னேயவையட்டித் தரப்பணியே.

எம்பெருமானுனை யேநினைந்தேத்துவ னெப்பொழுதும்
வம்பமருங்குழ லாளொருபாக மமர்ந்தவனே
செம்பொனின்மாளிகை சூழ்திருக்கோளிலி யெம்பெருமான்
அன்பதுவாயடி யேற்கவையட்டித் தரப்பணியே.

அரக்கன் முடிகரங் களடர்த்திட்டவெம் மாதிப்பிரான்
பரக்குமரவல்கு லாள்பரவையவள் வாடுகின்றுள்
குரக்கினங்கள்குதி கொள்குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
இரக்கமதாயடி யேற்கவையட்டித் தரப்பணியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டையமால்பிர மன்பறந்தும்மிடந் தும்மயர்ந்தும்
கண்டிலராயவர் கள்கழல்காண்பரி தாயபிரான்
தெண்டிரைநீர்வயல் சூழ்திருக்கோளிலி யெம்பெருமான்
அண்டமதாயவனே யவையட்டித் தரப்பணியே.

கொல்லைவளம்புற விற்றிருக்கோளிலி மேயவனை
நல்லவர்தாம்பர வுந்திருநாவல வூரனவன்
நெல்லிடவாட்கள்வேண்டி நினைந்தேத்திய பத்தும்வல்லார்
அல்லல்களைந்துலகி னண்டர்வானுல காள்பவரே.

திருச்சிற்றம்பலம்

## திருவெண்ணெய்நல்லூர்

### பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறை சூடீபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

நாயேன்பல நாளுநினைப் பின்றிமனத் துன்னைப்
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகாவருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆயாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அன்னேயுனக் காளாயினி யல்லேனென லாமே.

முடியேனினிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்ற மூர்த்தி
கொடியேன்பல பொய்யேயுரைப் பேனைக்குறிக் கொண்ணீ
செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அடிகேளுனக் காளாயினி யல்லேனென லாமே.

பாதம்பணி வார்கள்பெறும் பண்டமது பணியாய்
ஆதன்பொரு ளானேனறி வில்லேனரு ளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆதீயுனக் காளாயினி யல்லேனென லாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணார்மதி சூடீதழல் போலுந்திரு மேனீ
எண்ணார்புர மூன்றுமெரி யுண்ணநகை செய்தாய்
மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அண்ணாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

ஊனாயுயி ரானாயுட லானாயுல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய்
தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆனாயுனக் காளாயினி யல்லேனென லாமே.

ஏற்றார்புர மூன்றுமெரி யுண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வானீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
ஆற்றாயுனக் காளாயினி யல்லேனென லாமே.

மழுவாள்வல னேந்தீமறை யோதீமங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தலுன தொழிலே
செழுவார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையுள்
அழகாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

காரூர்புன லெய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புக ழெய்தித்திகழ் பன்மாமணி யுந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட் டுரையுள்
ஆரூரனெம் பெருமாற்கா ளல்லேனென லாமே.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோளறு திருப்பதிகம்

### பண் - பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

வேயுறுதோளிபங்கன் விடமுண்டகண்டன்
    மிகநல்லவீணை தடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேலணிந்தெ
    னுளமேபுகுந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
    சனிபாம்பிரண்டுமுடனே
ஆசறுநல்லநல்ல வவைநல்லநல்ல
    வடியாரவர்க்குமிகவே.

என்பொடுகொம்பொடாமை யிவைமார்பிலங்க
    வெருதேறியேழையுடனே
பொன்பொதிமத்தமாலை புனல்சூடிவந்தெ
    னுளமேபுகுந்தவதனால்
ஒன்பதொடொன்றொடேழு பதினெட்டொடாறு
    முடனாயநாள்களவைதாம்
அன்பொடுநல்லநல்ல வவைநல்லநல்ல
    வடியாரவர்க்குமிகவே.

உருவளர்பவளமேனி யொளிநீறணிந்து
    வுமையோடும்வெள்ளைவிடைமேல்
முருகலர்கொன்றைதிங்கள் முடிமேலணிந்தெ
    னுளமேபுகுந்தவதனால்
திருமகள்கலையதூர்தி செயமாதுபூமி
    திசைதெய்வமானபலவும்
அருநெதிநல்லநல்ல வவைநல்லநல்ல
    வடியாரவர்க்குமிகவே.

மதிநுதன்மங்கையோடு வடபாலிருந்து
    மறையோதுமெங்கள்பரமன்
நதியொடுகொன்றைமாலை முடிமேலணிந்தெ
    னுளமேபுகுந்தவதனால்
கொதியுறுகாலனங்கி நமனோடுதூதர்
    கொடுநோய்களானபலவும்
அதிகுணநல்லநல்ல வவைநல்லநல்ல
    வடியாரவர்க்குமிகவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சணிகண்டனெந்தை மடவாடனோடும்
விடையேறுநங்கள்பரமன்
துஞ்சிருள்வன்னிகொன்றை முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
வெஞ்சினவவுணரோடு முருமிடியுமின்னு
மிகையானபூதமவையும்
அஞ்சிடுநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

வாள்வரியதளதாடை வரிகோவணத்தர்
மடவாடனோடுமுடனாய்
நாண்மலர்வன்னிகொன்றை நதிசூடிவந்தெ
னுளமேபுகுந்தவதனால்
கோளரியுழுவையோடு கொலையானைகேழல்
கொடுநாகமோடுகரடி
ஆளரிநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

செப்பிளமுலைநன்மங்கை யொருபாகமாக
விடையேறுசெல்வனடைவார்
ஒப்பிளமதியுமப்பு முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
வெப்பொடுகுளிரும்வாத மிகையானபித்தும்
வினையானவந்துநலியா
அப்படிநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

வேள்படவிழிசெய்தன்று விடைமேலிருந்து
மடவாடனோடுமுடனாய்
வாண்மதிவன்னிகொன்றை மலர்சூடிவந்தெ
னுளமேபுகுந்தவதனால்
ஏழ்கடல்சூழிலங்கை யரையன்றனோடு
மிடரானவந்துநலியா
ஆழ்கடலல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

பலபலவேடமாகும் பரனாரிபாகன்
பசுவேறுமெங்கள்பரமன்
சலமகளோடெருக்கு முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
மலர்மிசையோனுமாலு மறையோடுதேவர்
வருகாலமானபலவும்
அலைகடன்மேரு நல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொத்தலர்குழலியோடு விசையற்குநல்கு
குணமாயவேடவிகிர்தன்
மத்தமுமதியுநாக முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
புத்தரொடமணைவாதி லழிவிக்குமண்ணை
திருநீறுசெம்மைதிடமே
அத்தகுநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

தேனமர்பொழில்கொளாலை விளைசெந்நெறுன்னி
வளர்செம்பொனெங்குநிகழ
நான்முகனுதியாய பிரமாபுரத்து
மறைஞானஞானமுனிவன்
தானுறுகோளுநாளுமடியாரைவந்து
நலியாதவண்ணமுரைசெய்
ஆனசொன்மாலையோது மடியார்கள்வானி
லரசாள்வராணைநமதே.

திருச்சிற்றம்பலம்

## திருவாவடுதுறை

### நாலடிமேல்வைப்பு. பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

இடரினுந் தளரினு மெனதுறுநோய்
தொடரினு முனகழ றொழுதெழுவேன்
கடறனி லமுதொடு கலந்த நஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே.

வாழினுஞ் சாவினும் வருந்தினும்போய்
வீழினு முனகழல் விடுவேனல்லேன்
தாழிளந் தடம்புன றயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நனவினுங் கனவினு நம்பாவுன்னை
மனவினும் வழிபடன் மறவேனம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனலெரி யனல்புல்கு கையவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே.

தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மல ரடியலா லரற்றுதென்னுக்
கைமல்கு வரிசிலைக் கணையொன்றினல்
மும்மதி ளெரியெழ முனிந்தவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே.

கையது வீழினுங் கழிவுறினும்
செய்கழ லடியலாற் சிந்தைசெய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே.

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாயுன் னடியலா லேத்தாதென்னு
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே.

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் னடியலா லரற்றுதென்னு
ஒப்புடை யொருவனை யுருவழிய
அப்படி யழலெழ விழித்தவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே.

பேரிடர் பெருகியோர் பிணிவரினுஞ்
சீருடைக் கழலலாற் சிந்தைசெய்யேன்
ஏருடை மணிமுடி யிராவணனை
ஆரிடர் படவரை யடர்த்தவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடு துறை யரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணினும் பசிப்பினு முறங்கினுநின்
ஒண்மல ரடியலா லுரையாதென்னுக்
கண்ணனுங் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலு மளப்பரி தாயவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே.

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாவுன் னடியலா லரற்றாதென்னுப்
புத்தருஞ் சமணரும் புறனுரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே
இதுவோவெமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே.

அலைபுன லாவடு துறையமர்ந்த
இலைநுனை வேற்படை யெம்மிறையை
நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலையுடை யருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயினநீங் கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் னேறுவர்நிலமிசை நிலையிலரே.

திருச்சிற்றம்பலம்

# திருத்தொண்டத்தொகை

## பண் - கொல்லிக்கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே யென்னாத வியற்பகைக்கு மடியே
னிளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலைமலிந்த வேனம்பி யெறிபத்தர்க் கடியே
ஏனாதி நாதன்ற னடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடவூரிற் கலயன்ற னடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள்வள்ளன் மானக்கஞ் சாற
னெஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியேன்
அலைமலிந்த புனன்மங்கை யானயர்க் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கு முருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க்கு மடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினா லெறிந்த
அம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்ற னடியார்க்கு மடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் னடியார்க்கு மடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கு மடியேன்
ஒருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியே
னொலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

வம்பறா வரிவண்டு மணநாற மலரு
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியே
னேயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியேன்
நம்பிரான் திருமூல னடியார்க்கு மடியே
னாட்டமிகு தண்டிக்கு மூர்க்கற்கு மடியே
அம்பரான் சோமாசி மாறனுக்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
செங்காட்டாங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவாற்கு மடியேன்
கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யனடியா னரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடனாகை யதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியேன்
ஐயடிகள் காடவர்கோ னடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கு மடியேன்
நிறைக்கொண்ட சிந்தையா னெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்
துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியேன்
அறைக்கொண்ட வேனம்பி முனையடுவார்க் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் னடியார்க்கு மடியேன்
புடைசூழ்ந்த புலியதண்மே லரவாட வாடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்துணைக்கு மடியேன்
அடல்சூழ்ந்த வேனம்பி கோட்புலிக்கு மடியே
னாரூர னாரூரி லாம்மானுக் காளே.

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலு மடிச்சார்ந்தா ரடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையாண் மானிக்கும் நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட செங்கணார்க் கடியேன்
றிருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனா மரனடியே யடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன் றிருநாவ லூர்க்கோன்
அன்னவனா மாரூர னடிமைகேட்·டுவப்பா
ராரூரி லம்மானுக் கன்பரா வாரே.

திருச்சிற்றம்பலம்

---

## திருவாசகம்

### திருச்சிற்றம்பலம்

இராகம் - மோகனம் (சுத்தாங்கமாகப் பாடவேண்டியது)

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்துஉன்
விரையார் கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றிசயசய
போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக்
கண்டு கொள்ளே.

ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு
அன்பிலை என்புஉருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின் றதும்இலை
துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறு அலறிலை
செய்வதொன் றறியேனே.

இன்றெனக் கருளி இருள்கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின்தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிது மற்றின்மை
சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்து
ஒன்றாந் திருப்பெருந் துறைஉறை சிவனே
ஒன்று நீயல்லை அன்றி ஒன்றில்லை
யாருன்னை அறியகிற் பாரே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்டலத்து ஈசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோலால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை
பேயேன துள்ளப்பிழை பொறுக்கும் பெருமையனை
சீயேது மில்லாதெ தன் செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

---

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

திருச்சிற்றம்பலம்

---

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க ! நாதன் தாள்வாழ்க !
இமைப்பொழுதும் என்நெஞ்சில், நீங்காதான் தாள்வாழ்க !
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க !
ஆகமம் ஆகிநின்று, அண்ணிப்பான் தாள்வாழ்க !
ஏகன் அநேகன், இறைவன் அடிவாழ்க !

வேகம் கெடுத்தாண்ட, வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன், பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன், பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும், கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும், சீரோன் கழல்வெல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசன் அடிபோற்றி, எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி, சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும், மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறை, நம் தேவன்அடிபோற்றி
ஆராத இன்பம், அருளும் மலைபோற்றி!
சிவன்அவன் என்சிந்தையுள். நின்ற அதனால்
அவன் அருளாலே, அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழ, சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும், ஓய உரைப்பன்யான்

கண்நுதலான் தன்கருணைக், கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா, எழிலார் கழல்இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து, மிக்காய், விளங்கொளியாய்
எண்இறந்து எல்லை, இலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன், புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப், புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப், பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப், பேயாய் கணங்களாய்
வல்அசுரர் ஆகி, முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற, இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும், பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள், கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள், ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா, விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி, ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய், இயமானன் ஆம்விமலா
பொய்யாயின எல்லாம், போய்அகல வந்தருளி
மெஞ்ஞானம் ஆகி, மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன், இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை, அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி, இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய், அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னை, புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய, நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு, நெய் கலந்தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுள், தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும், எங்கள் பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறங்கள் ஓர் ஐந்துடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான், வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய, மாய இருளை
அறம்பாவம் என்னும், அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும், புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது, வாயில் குடிலை
மலங்கப் புலனைந்தும், வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால், விமலா உனக்குக்
கலந்தஅன்பு ஆகிக், கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத, சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி, நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்த், கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த, தயாவான தத்துவனே
மாசற்ற சோதி, மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார், அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப், பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து, நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற, பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே, அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து, ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும், இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே, யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்இருளே, தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே, நுணுக்கரிய நுண்உணர்வே
போக்கும் வரவும், புணர்வும்இலாப் புண்ணியனே
காக்கும் எம்காவலனே, காண்பரிய பேர்ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே, அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச், சொல்லாத நுண்உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின், வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத், தெளிவே என்சிந்தனையுள்
ஊற்றான உண்ணார், அமுதே உடையானே
வேற்று விகார, விடக்குடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா, அரனேயோ என்றென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிப் புகழ்ந்திருந்து, பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து, வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக், கட்டழிக்க வல்லானே
நள்இருளில் நட்டம், பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே, தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி, அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச், சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின், பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின், உள்ளார் சிவனடிகீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

# திருவிசைப்பா

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை ! வளர்கநம்
பத்தர்கள் ! வஞ்சகர் போய்அகல
பொன்னின்செய் ! மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

—

ஆரார் வந்தார் ? அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

—

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம்.அன்(று) அருள
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெரியபுராணம்**

**திருச்சிற்றம்பலம்**

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்
நிலாவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

ஊனடைந்த உடம்பின் பிறவியே
தானடைந்த உறுதியைச் சாருமால்
தேனடைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாநடஞ்செய் வரதர் பொற்றாள் தொழ.

எடுக்குமாக் கதையின் தமிழ்ச்செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திட
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்களிற்றைக் கருத்துள் இருத்துவாம்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க
பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவளவயற்பு கலித்திரு ஞானசம்பந்தர்
பாதமலர்தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

**திருச்சிற்றம்பலம்.**

# திருப்புகழ்

(விநாயகர் துதி)

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திரு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுடனச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டானுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய்
சகல கலாவல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.

## அபிராமியம்மைப் பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய! நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுகண்டாய்;
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தக்ஷிணாமூர்த்தி துதி

பூங்கமல வதனமும் பொழிகருணை நயனமும்
புன்முருவல் நிலவெறிப்பும்
பொலிசடா வியுடமதில் உறைநிலா மதியும் ஒளி
புனைகுழை இலங்கு காதும்
தேங்கு பரமானந்த சின்மயா காயமாஞ்
சிந்தியருண் முத்திரையுமேற்
சிவாநுபவ நீங்கினோர் சேரவருள் செபமாலை
சிவஞான புத்தகமுமோர்
வேங்கையதளுடையும் சரற்கால மதிகோடி
வெள்ளமென நிறைவடிவமும்
மேலான தெய்வநீ யன்றி வேறில்லை யிது
மெய்யெடுத்த கனலும்
ஓங்க வடவாலடியில் உறைகின்ற தெய்வமே
உன்னையன்றி வேறு நினையேன்
ஒன்றாகியானந்த வுருவாகி யென்னுயிர்க்
குயிரான பரமசிவமே.

# திருமந்திரம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

---

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினைமாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவருமாவர்
சிவசிவ என்னச் சிவகதிதானே.

---

அரகர என்ன அரியதொன்றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும் பிறப்பன்றே.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

எமது குடும்பத் தலைவர் வே. பாலசுப்பிரமணியம் அவர்களின் மரணச் சடங்கில் நேரில் வந்து பங்குபற்றி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் அவரது நினைவு மலருக்கு இரங்கற் செய்தி வழங்கிய கௌரவ பிரதம மந்திரி, கௌரவ அமைச்சர்கள், கௌரவ இராஜாங்க அமைச்சர்கள், கௌரவ பிரதி நகராதிபதி ஆகியோருக்கும் அகில இலங்கை இந்துமாமன்றத்தினருக்கும் மற்றும் உள்நாட்டு – வெளிநாட்டு நிறுவனத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்படிக்கு

மனைவி சாந்தி பாலசுப்பிரமணியம்

பிள்ளைகள் உகந்தன், கார்த்திகேயன்

மற்றும் உற்றார் – உறவினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE MEIHANDAN PRESS LIMITED

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org